# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2080/22 - 2018 ජූලි මස 16 වැනි සඳුදා - 2018.07.16

*2080/22 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**சுத்திகரிப்புச் சேவை தொழிலுக்கான சம்பளச் சபை**

சுத்திகரிப்புச் சேவை தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,<br>
செயலாளர்,<br>
தொழில் மற்றும் தொழிற்சங்க<br>
உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05,<br>
2018, யூலை 10.

**அட்டவணை**

சுத்திகரிப்புச் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளங்கள் தொடர்பாக தொழில் ஆணையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப ஆக்கப்பட்டனவும், 1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 07ஆந் திகதிய 774/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்படுவனவும், 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1812/30 ஆம் இலக்க வத்த்தமானியின் அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவுமான தீர்மானங்கள் அட்டவணையில் பின்வரும் பகுதியினை பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும். I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களும், சுத்திகரிப்புச் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குமான நேர வேலை தொடர்பாக கொடுத்தற்பாலதான ஆகக்குறைந்த சம்பள வீதம் I ஆம் நிரலுக்கெதிராக II ஆம் நிரலிற் கூறப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

| *நிரல் I* | *நிரல் II* சாதாரண வேலை நாள் ஒன்றிற்கான சம்பள வீதம் ரூ. ச. |
|---|---|
| (அ) இயக்கும் ஆளணி - சுத்தப்படுத்துவோர், மலசலகூடத் தொழிலாளர் சுத்திகரிப்போர் அல்லது எப்பெயர் கொண்டு அழைப்பினும் அலுவலகங்களையும் நிறுவனங்களையும் சுத்தப்படுத்தும் செயலில் ஈடுபடுவோர் | 600.00 |
| (ஆ) மேற்பார்வை ஆளணி - இயக்கும் ஆளணிக்குப் பொறுப்பாகவுள்ள ஊழியர்கள், பொறுப்பதிகாரிகள், மாற்றுக் கடமை மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள். | 700.00 |

8 - 52